DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous C.C.**No. 30/2023**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution

Defence

| | | |
|---|---|---|
| Name | : | சரவணராஜ் (சிறப்பு சார்பு ஆய்வாளர்) (Pw.6) |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 7th day November of 2023

( 4 வது எதிரிகள் ஆஜர் இல்லை. மேற்படி 4 வது எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது 1 முதல் 3 , 5 எதிரிகள் ஆஜர்.)

**முதல் விசாரணை :–**

1. நான் தற்போது கீழபரளச்சி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 03.11.2019 ம் தேதியன்று வீரசோழன் காவல் நிலையத்தில் 16.30 மணிக்கு பணியில் இருந்தபோது அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு சென்று 18.05 மணிக்கு சிகிச்சையில் இருந்த ஆதம் மைதின் மகன் தமீம்அன்சாரி என்பவரிடம் சென்று நடந்த சம்பவத்தை வாக்குமூலமாக பெற்று நிலையத்திற்கு அன்று 21.15 மணிக்கு வந்து நிலைய குற்ற எண்.81/19 இதச பிரிவுகள் 147, 148, 294(பி) 324, 506(2) ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன்.(**அந்த முதல் தகவல் அறிக்கை அதசாஆ 3**

**குறியீடு செய்யப்படுகிறது**) . பின்னர் அவற்றின் அசல் மற்றும் நகல்களை கனம் நீதிமன்றம் மற்றும் உயர்அதிகாரிகளுக்கு அனுப்பினேன்.

2. பின்னர் 04.11.2019 ம் தேதி காலை 8.30 மணியளவில் சம்பவ இடமான வீரசோழன் மேலவண்டல் தெரு சென்று சாட்சிகள் காஜா நஜ் முகைதீன், பிரபு ஆகியோர் முன்னிலையில் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளிடம் வாக்குமூலம் பதிவு செய்தேன்.(**அந்த பார்வை மகஜர் அதசாஆ 4 மற்றும் மாதிரி வரைபடம் அதசாஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர் சார்பு ஆய்வாளராக பணி பொறுப்பேற்ற கார்த்திகேயன் அவர்களிடம் வழக்கு கோப்பை ஒப்படைத்தேன். அவர் என்னை விசாரித்தார்.

எ.த.கு.வி–

2. எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் ஆஜர் . குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. எனவே குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது).

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.